Your Real Estate Investment Consultant
Dedicated for your success
OPPURTUNITIES ARE WAITING...
CALL ME FOR A FREE CONSULTATION
BUY SELL INVEST
DIVAGARAN MANIKKAVASAGAR
Realtor
HomeLife/GTA Realty Inc., Brokerage
416.888.7877

32ஆவது ஆண்டில்
# விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

துரித பணமாற்றுச் சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. Suite #3
(Eglinton & Markham)
Scarborough ON M1J 2H6
Tel: 416-267-8221
எமக்கு வேறு கிளைகள் எங்கும் இல்லை

நதி: 32 பாலம்: 05 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் MARCH 01, 2022

# தீவிரமடையும் ரஷ்ய உக்ரைன் போர்!

2022 பெப்ரவரி 24ஆம் திகதி ஆரம்பமான ரஷ்யாவின் உக்ரைன் (Ukraine) மீதான தாக்குதல் தீவிரமடைந்துள்ளது. உக்ரைன் நாட்டின் தலைநகரான கீவ் (Kyiv)ஐ கைப்பற்றும் வகையில் ரஷ்யா உக்ரைனில் பல்முனைத் தாக்குதல்களை நடத்தி வருகிறது. உக்ரைன் நகரங்களில் எண்ணெய்க் கிடங்குகள் மற்றும் எரிவாயுக் குழாய்கள் ரஷ்யப் படைகளால் தகர்க்கப்பட்டுள்ளன. பல இடங்களில் எண்ணெய்க் கிடங்குகளும், எரிவாயுக் குழாய்களும் கொழுந்துவிட்டு எரிகின்றன. உக்ரைன் அதிபர் வோலோடிமர் ஜெலன்ஸ்கி (Volodymyr Zelensky) "நாங்கள் ஒருபோதும் ரஷ்யாவிடம் சரணடைய மாட்டோம். நாட்டின் சுதந்திரத் திற்காகக் கடைசிவரை போராடுவோம்" என்று நாட்டு மக்களுக்குப் போர் தொடங்கிய பின்னர் விடுத்த செய்தியில் தெரிவித்துள்ளார்.

உக்ரைனின் ஆறாவது அதிபரான ஜெலன்ஸ்கி உக்ரைன் நாட்டின் 'Kryvyi Rih' நகரில் யூத இன (Jewish) பெற்றோருக்கு 1978 ஜனவரி 25இல் பிறந்தார். இவரின் தகப்பனார் பல்கலைக் கழகப் பேராசிரியர், தாயார் ஒரு பொறியியலாளர். ஜெலன்ஸ்கி, கியேவ் தேசியப் பொருளாதாரப் பல்கலைக்கழக சட்டவியல் பட்டதாரி. பட்டப்படிப்பை முடித்தபின்னர் ஒரு நகைச்சுவை நடிக ராகத் தனது தொழிலை ஆரம்பித்தார். ஒரு திரைப்படத் தயாரிப்பு நிறுவனத்தை உருவாக்கி திரைப்படங்கள், கார்ட்டூன்கள் மற்றும் பல தொலைக்காட்சி நிகழ்வு களைத் தயாரித்தும் நடித்தும் வந்தார். இவர் 'மக்கள் சேவையாளர்' (Servant of the People) என்ற தொலைக்காட்சித் தொடர் நிகழ்வு ஒன்றைத் தயாரித்து அதில் உக்ரைன் அதிபராக நடித்தார். இத்தொலைக்காட்சித் தொடர் உக்ரைனில் 2015ஆம் ஆண்டில் இருந்து 2019ஆம் ஆண்டுவரை ஒளிபரப்பப்பட்டு மக்களிடையே மிகவும் பிரபல்யம் அடைந்தது. அதைத் தொடர்ந்து ஜெலன்ஸ்கி 2018ஆம் ஆண்டில் தான் தயாரித்த தொலைக் காட்சித் தொடரின் 'மக்கள் சேவையாளர்' என்ற பெயரிலேயே அரசியல் கட்சி ஒன்றை ஆரம்பித்தார். 2019இல் உக்ரைனில் நடைபெற்ற அதிபர் தேர்தலில் போட்டியிட்டு அப்போதைய அதிபராக இருந்த Petro Poroshenkoஐ தோற்கடித்து 73 சதவீத வாக்குகள் பெற்று 2019 ஏப்பிரல் 12இல் உக்ரைன் அதிபராகத் தெரிவு செய்யப்பட்டார்.



Ukrainian servicemen ride on tanks towards the front line Thanks: ANATOLII STEPANOV/AFP via Getty

பின்னர் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலிலும் அவரது கட்சி வெற்றி ஈட்டியது. தனது தொலைக்காட்சித் தொடரில் கூறிய மாதிரி நாட்டில் ஊழலை முடிறியடிப்பதாகவும், நாட்டில் உள்ள உக்ரைன் மொழி பேசுபவர்களையும், ரஷ்ய மொழி பேசுபவர்களையும் ஒற்றுமைப்படுத்துவதாகவும் அதிபர் பதவி ஏற்ற பின்னரும் ஜெலன்ஸ்கி கூறிவந்தார்.

உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கியின் முதலாவது வெளிநாட்டுப் பயணமாக Brusselsஇற்குச் சென்று அங்கு ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் நேற்றோ (NATO) அதிகாரிகளைச் சந்தித்து உரையாடினார். 2021 ஏப்பிரலில் உக்ரைன் அதிபர் அமெரிக்க அதிபருடன் தொடர்பு கொண்டு உக்ரைனின் NATOஇல் சேரும் விருப்பத்தை விரைவில் பூர்த்தி செய்யுமாறு கேட்டார். பின்னர் 2021 செப்ரெம்பரில் அமெரிக்கப் பயணத்தை மேற்கொண்ட ஜெலன்ஸ்கி அங்கு அமெரிக்க அதிபர் ஜோ பைடன் மற்றும் அமெரிக்கப் பாதுகாப்புச் செயலாளர் Lloyd Austin ஆகியோருடன் கலந்துரை யாடினார். 2021 நொவெம்பரில் உக்ரைன் அதிபர் ரஷ்ய அரசு உக்ரைனில் உள்ள அரச எதிர்ப்பாளர்களுடன் சேர்ந்து தனது ஆட்சியைக் கவிழ்க்க முயல்கிறது எனக் குற்றம் சாட்டினார். இதை ரஷ்ய அதிபர் வன்மையாக மறுத்தார்.

ரஷ்ய நாட்டின் எல்லையில் இருக்கும் உக்ரைன் நாடு NATOஇல் இணைவதை யும், NATO படைகளின் ஆயுதங்கள் ரஷ்ய நாட்டின் எல்லையில் கொண்டுவந்து நிறுத்துவதையும் விரும்பாத ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் (Vladimir Putin) உக்ரைன் நாட்டைத் தமது கட்டுப்பாட்டுக் குள் கொண்டு வருவதற்காகவே போரை ஆரம்பித்தார் எனப் பெரும்பாலான ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

ரஷ்ய நாட்டின் அதிபராக இருக்கும்

தொடர்ச்சி 02ஆம் பக்கம்...)

BUY & SELL THROUGH ME & SEE THE DIFFERENCE!
Kannan Nadarajah
416-889-1083
kannanhomes143@yahoo.com
Homelife/Future Realty Inc.

My services are 100% FREE
For First Time Buyers/Buyers/Tenants
வீடு வாடகைக்கு வாங்க மற்றும் விற்க அழையுங்கள்
Para Tisi
647-296-0596
www.tisipara.com
"Don't wait to buy real estate. Buy real estate and wait" - Will Rogers
Call Para 647.296.0596.

FOR ALL YOUR COTTAGE NEEDS
SIVAGE SIVAGUMARAN
CPA, CGA, GUILD™, SRES, ABR, SRS, RSPS
BROKER
416-553-8902
sivagehomes@sivage.ca
www.sivage.ca
RE/MAX

Lexus of Richmond Hill
LEXUS
குமார் ஜெகசோதி
Tel. 905.883.8812
Cell: 416.451.0565
11552 Yonge Sreet
Richmond Hill, ON L4E 3N7
www.lexusrh.com
Kumar Jegasothy
Sales Consultant

FOR ALL YOUR REAL ESTATE NEEDS
GEORGE PARANTHAMAN
georgeparan1@gmail.com
416-277-9044
HomeLife GTA Realty Inc. Brokerage
5215 Finch Ave.E. #203, Toronto ON. M1S 0C2
B: 416.321.6969 F: 416.321.6963
TRUTH BUILDS TRUST

BUY & SELL THROUGH ME & SEE THE DIFFERENCE!
Sukumar Selvaratnam
Real Estate Broker
416.624.4803
suku07@hotmail.com
www.sukumarhomes.com
Homelife/Future Realty Inc., Brokerage

DENTAL OFFICE
3351 Markham Road, Unit #129 Markham & Steeles Tel: 416.609.2022
3150 Eglinton Ave East, Unit #5 Markham & Eglinton Tel: 416.264.3232
Dr.Iru Vijayanathan
BDS, FAGD, MFDS RCPS(Glasg.)
Dental Surgeon
Dentistry for children, adults and seniors

வீடு வாடகைக்கு... வாங்க/ விற்க...
Rathiga Thillaivannan B.com
Broker
Dir: 647.839.0079
info@rathigahomes.ca
www.rathigahomes.com
Re/Max Realtron Realty Inc.





# தீவிரமடையும்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

விளாடிமிர் புடின் ரஷ்யாவின் Leningrad நகரில் 1952 ஒக்ரோபர் 7இல் பிறந்தவர். இவர் Leningrad அரச பல்கலைக்கழகத்தின் சட்டவியல் பட்டதாரி. புடின் ரஷ்யாவின் அதிபராக முதலில் 1999ஆம் ஆண்டில் இருந்து 2008ஆம் ஆண்டுவரை பதவி வகித்தவர். அதன் பின்னர் 2008ஆம் ஆண்டில் இருந்து 2012ஆம் ஆண்டுவரை ரஷ்யாவின் பிரதம மந்திரியாகப் பதவி வகித்துப் பின்னர் 2012ஆம் ஆண்டில் இருந்து மீண்டும் ரஷ்யாவின் அதிபராகப் பதவி வகிக்கிறார்.

2021 செப்ரெம்பரில் உக்ரைன் படைகள் NATO படைகளுடன் சேர்ந்து இராணுவப் பயற்சிகளை மேற்கொண்டது. அப்போது ரஷ்ய அரசு உக்ரைன் நாட்டினுள் NATO இராணுவ உள்கட்டமைப்பை விரிவுப் படுத்துவதை வன்மையாகக் கண்டித்தது. அத்தருணத்தில் ஊடகங்களில் ரஷ்யா உக்ரைன் நாட்டை ஆக்கிரமிக்கத் தயாராகி வருகிறது என வெளிவந்த செய்தியை புட்டினுடைய செய்தித் தொடர்பாளர் Dmitry Peskov மறுத்திருந்தார்.

2021 நொவெம்பர் 30இல் ரஷ்ய அதிபர் புடின், உக்ரைனில் NATO படைகளை விரிவுப்படுத்துவது, அதிலும் குறிப்பாக ரஷ்ய நகரங்களைத் தாக்கும் திறன் கொண்ட நீண்ட தூர ஏவுகணைகளை நிறுவுதல் அல்லது ரூமேனியா (Romania) மற்றும் போலந்து (Poland) நாடுகளில் நிறுவப்பட்டுள்ள NATOஇனுடைய ஏவுகணைப் பாதுகாப்பு அமைப்புகளை (Missile Defence Systems) உக்ரைனில் நிலை நிறுத்துவது போன்றவற்றை ரஷ்ய அரசால் ஏற்றுக்கொள்ள முடியாது என ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார்.



Volodymyr Zelensky

டிசம்பர் 2021இல் NATO படைகள் மேலும் கிழக்கு நோக்கி விரிவடையாது எனவும் ரஷ்ய எல்லைக்கு மிகவும் அருகாமையில் ரஷ்ய மக்களை அச்சுறுத்தும் ஆயுத அமைப்புகளை NATO அமைப்பு வைக்காது எனவும் சட்டப்பூர்வமான உத்தரவாதத்தை அமெரிக்க அதிபர் ஜோ பைடன் தங்களுக்குத் தரவேண்டும் என ரஷ்ய அதிபர் புடின் கேட்டதாக அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. அத்துடன் புடினுடைய இந்தக் கோரிக்கையை அமெரிக்க அரசும் NATO நாடுகளும் ஏற்க மறுத்ததாகவும் அந்த ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

உக்ரைனின் தெற்குப் பிரதேசமான Crimeaஐ 2014ஆம் ஆண்டில் ரஷ்யா தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தது. அதைத் தொடர்ந்து அங்கு நடத்திய சர்வசன வாக்கெடுப்பின் மூலம் பெரும் பாலான மக்களின் ஆதரவைப் பெற்று Crimeaஐ ரஷ்யாவுடன் இணைத்துக் கொண்டது. அப்போது உலகநாடுகள் எல்லாம் ரஷ்யா மீது கண்டனத்தைத் தெரிவித்ததோடு, ரஷ்யாவை G8 நாடுகளில் இருந்து விலக்கி வைத்தன.

உக்ரைனின் கிழக்குப் பிரதேசமான Donbasஇன் Donetsk மற்றும் Luhansk பகுதிகளில் ரஷ்ய ஆதரவுப் போராளிகள் தனிநாடு கேட்டுப் போராடி வருகின்றனர்.

2022 பெப்ரவரி 2ஆம் திகதி வெளிநாட்டு ஊடகங்களுக்குப் புடின் வழங்கிய செவ்வியில், உக்ரைன் நாட்டிற்கு NATO உறுப்புரிமை கிடைத்தால், NATO படைகளின் உதவியுடன் உக்ரைன், Crimeaஐயும் Donbas பிரதேசத்தையும் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முயலும். அப்போது நாங்கள் NATO நாடுகளின் படைகளுடன் போரிடுவதா? இதைப்பற்றி நீங்கள் சிந்தித்துப் பார்க்கிறீர்களா? என்று வினவினார்.

பெப்ரவரி 7ஆம் திகதி ரஷ்ய அதிபர் புடினை சந்தித்த பிரான்ஸ் நாட்டு அதிபர் இமானுவேல் மேக்ரான் (Emmanuel Macron) பேச்சுவார்த்தைகளின் பின்னர், "அனைவருக்கும் பொருந்தக்கூடிய சமரசங்களைக் கண்டறிய நாங்கள் அனைத்தையும் செய்வோம்" எனக் கூட்டறிக்கையை புடின் உடன் சேர்ந்து ஊடகங்களுக்கு வெளியிட்டார்.

பெப்ரவரி 15ஆம் திகதி ரஷ்ய நாடாளு மன்றம் உக்ரைனின் Donbas பிரதேசத்தில் தனிநாடுகள் கேட்டுப் போராடிவரும் ரஷ்ய ஆதரவுப் போராளிகளின் கோரிக்கையை ஏற்று Donetsk மற்றும் Luhansk பகுதிகளை இரண்டு குடியரசுகளாக அங்கீகரித்துத் தீர்மானம் நிறைவேற்றியது. பெப்ரவரி 24இல் ரஷ்ய அதிபர் புடின் தனது தொலைக்காட்சி உரையில் நாட்டு மக்களுக்கு உக்ரைனில் ஒரு "சிறப்பு இராணுவ நடவடிக்கை" (Special Military Operation) மேற்கொள்வதாக அறிவித்தார். அதைத் தொடர்ந்து உக்ரைனின் வடக்கு, கிழக்கு, தெற்குப் பகுதிகளில் ஏவுகணைத் தாக்குதலை ரஷ்யா ஆரம்பித்தது.

உக்ரைன் மீதான தாக்குதலைத் தொடர்ந்து ஐக்கியநாடுகள் சபையின் பாதுகாப்புச்சபை பெப்ரவரி 25இல் கூடி, "ரஷ்யா உடனடியாக உக்ரைன் மீதான அதன் தாக்குதலை நிறுத்தி அனைத்து இராணுவ வீரர்களையும் திரும்பப் பெற வேண்டும்" என ஒரு தீர்மானம் எடுத்தது. அது வாக்கெடுப்புக்கு வந்தபோது

தொடர்ச்சி 11ஆம் பக்கம்...)


Available Till Midnight
Including Weekends & Holidays
ANTON
DHARMASEELAN
MORTGAE AGENT
#1 Mortgage Agent in GTA
#2 in Canada
CALL ME FIRST
FOR ALL YOUR MORTGAGE NEEDS
PURCHASE
REFINANCE
SELF EMPLOYED
BAD CREDIT
INVESTMENT PROPERTY
RENEWAL
MAJOR BANKS
ALTERNATIVE LENDERS
B LENDERS
CREDIT UNIONS
TRUST COMPANIES
PRIVATE LENDERS
416 704 1200
anton@myhomemls.ca
MORTGAGE ALLIANCE
Broker # 10530
FAX: 1 866 566 3068

# நாமும் நமது இல்லமும் 602

## ரொறொன்ரோ ஆதன வியாபாரம் வீரியம் இழக்கின்றதா?



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

இந்த வருடம் (2022) தொடங்கியபோது, ஆதன வியாபாரம் மிகவும் உச்சமாகக் காணப்பட்டது. பெப்ரவரி 2022இல் வியாபாரத்தில் மாற்றத்தைக் காணக் கூடியதாக இருந்தது. இந்த ஆண்டின் ஆரம்பத்தில், ஓர் ஆதனத்தை வாங்குவதற்குப் பத்திற்கு (10) மேற்பட்டவர்கள் போட்டி போட்டுக் கொண்டிருந்தனர். இப்பொழுது மூன்று அல்லது நாலு என்றளவிற்குக் குறைந்து விட்டது. அத்துடன் சில ஆதனங்கள் விற்பதற்கு எதிர்பார்த்ததை விட அதிக காலமும், குறைந்த விலையிலும் ரொறொன்ரோவில் விற்பதனைக் காணலாம். ஏற்கனவே அதிக ஆதனங்கள் சந்தைக்கு வருவதுடன், இளவேனிற்காலத்தில் (Spring) மேலும் அதிக ஆதனங்கள் சந்தைப் படுத்துவதனை எதிர்பார்க்கலாம்.

ஸ்கோஷியா வங்கியின் பொருளாதார அறிஞர் ஃபரா ஒம்றன் (Farah Omran)இன் கூற்றின்படி, கனடாவில் ஜனவரி 2022 இரண்டாவது அதிக வியாபாரம் நடந்த மாதமாக உள்ளது. ஜனவரி 2022இல் எதிர்பார்த்த வட்டிவீத அதிகரிப்பு ஏற்படாததும் காரணமாக இருக்கலாம். எனினும் மார்ச் 02, 2022இல் வட்டிவீத அதிகரிப்பை எதிர்பார்க்கலாம். அரை வீதமாகவோ (0.5%) அல்லது கால் (0.25%) வீதமாகவோ இருக்கும் என்பதே இன்றைய கேள்வி. எனினும் ரஷ்யா மற்றும் உக்ரைன் இற்கிடையேயான போர் கனடிய மத்திய வங்கி வட்டி வீதத்தில் என்னவிதமான மாற்றத்தை செய்யும் என்பதனை எதிர்வரும் காலத்தில் தெரியவரும்.

கொரோனா-19இன் பாதிப்பு குறைந்து வருவதால், கனடாவிற்கு அதிக மக்கள் வருவதற்கேற்ப வசதிகள் ஏற்படுகின்றது. அத்துடன் சுற்றுலா பயணிகளின் வருகையும் அதிகரிப்பு ஏற்படும் என எதிர்பார்க்கலாம்.

வட அமெரிக்காவில் முக்கியமானதாகவும், அதிக மக்கள் குடியேற விரும்பும் நகரமாக ரொறொன்ரோ காணப்படுகின்றது. இதனால் விலைகூடிய ஆதனங்களை வாங்குவதற்கு வெளிநாட்டவர்கள், உள்நாட்டவர்கள் விரும்புவதனை அறியக் கூடியதாக உள்ளது.

ரொறொன்ரோவில் விலைகூடிய பகுதிகளான Bridle Path, Rosedale மற்றும் Forest Hill போன்ற பகுதிகளில் விலை கூடிய ஆதனங்களை வாங்கப் பலர் விரும்புவதனையும் காணலாம்.

பொதுவாக ஆடம்பர வீடுகளை வாங்குவோர் இப்பகுதிகளையே விரும்புவர். போதிய ஆதனங்கள் விற்பனைக்கு இல்லை என்பதே உண்மை ஆகும். கொரோனா காலத்தில் $30 மில்லியனிற்கு மேற்பட்ட வசதி கொண்டவர்களின் எண்ணிக்கையில் 10% அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் ஆடம்பர ஆதனங்களை வாங்குவதற்குப் பலர் விரும்புகின்றனர். கடந்த சில வருடங்களாக ரொறொன்ரோ நகரில் வசதியான ஆடம்பர ஆதனங்களின் வியாபாரம் அதிகரித்திருந்தது. இப்பொழுது மேலும் அதிகரிப்பதனைக் காணலாம். இப்பொழுது ஆடம்பர வீடு என்பதன் வரைவிலக்கணமே மாறிவிட்டது. சில வருடங்களிற்கு முன்பாக $1 மில்லியனிற்கு மேற்பட்ட வீடுகள் ஆடம்பரம் ஆதனம் என அழைக்கப்படும்.

இன்று ரொறொன்ரோ ஆதன சபையின் அறிக்கையின்படி (Toronto Real Estate Board) ஜனவரி 2022இன் சராசரி ஆதன விலை $1,242,793 ஆகும். இதனால் இப்பொழுது ஆடம்பர ஆதனம் என்பது $3 மில்லியனிற்கு மேற்பட்டதாகக் கணிக்கப்படுகின்றது. $8 மில்லியனிற்கு மேற்பட்டது உயர் ஆடம்பர (Ultra - Luxury) ஆதனம் எனக் கொள்ளப்படுகின்றது. இன்றைய காலத்தில் இந்தப் பெறுமதியான வீடுகளிற்கு அதிகமான வாங்குவோர் சந்தையில் காணப்படுகின்றனர்.



கோவிட்-19 மக்கள் தொழில்புரியும் முறைகளில், அலுவலக சந்திப்புகள், உணவு முறை, அலுவலகத்திற்கு சென்று வரும் முறைகள் என பலவித மாற்றங்களை ஏற்படுத்தி விட்டது. இதனால் மக்களின் சிந்தனையிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

கடந்த இரு (2) வருடங்களாகப் பழக்கப்பட்ட மக்களினால் ஏற்பட்ட மாற்றங்களும், ஆதன விலையின் அதீத அதிகரிப்பிற்குக் காரணமாகும். இப்பொழுது கொரோனாவின் நடைமுறைகள் தளர்த்தப்படுவதால், மக்கள் பழைய முறைக்கு மாறுவார்களா? இதுவே புதிய நடைமுறையாகலாம். இந்த மாற்றம் ஆதன வியாபாரத்தில் எவ்வாறு மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதை எதிர்காலம் தெரியப்படுத்தும்.




## சாம்பல் நாற்காலி

வணிகநூலால் பின்னப்பட்டு
நீரில் அசைந்து செல்லும்
வலையில் தலை செருகிப் பிடிபடுகின்றன
ஐந்திணைக் கடலில் வளர்ந்து வாழ்கின்ற
அறிவு மயங்கிய மனிதமீன் இனங்கள்

தொப்புட்கொடி உறவு பேசிக்கொண்டு
வந்து இன்முகம் காட்டி இறங்கியோர்
குண்டு போட்டுச்சென்ற துன்பங்கள்

சிதறிய துண்டுகளாக முறிந்து விழுந்த
கோபுரத்தில்
நசிந்து உடைந்து நொருங்கின
வலிய கூட்டில் அடைகாத்த முட்டைகள்

தேர் ஒடிந்த வீதியில் போர்ப்பறை
கேட்கிறது
கார்காலம் வருமுன்னே பலவித
நேர்காணல் தொடர்கின்றது

கருகிய கண்ணீர்க்குரல் ஒலியில்
மிதக்கின்றன ஆயுதக் கப்பல்கள்
காகம் இரையூட்டும் இருள்மாலையில்
உருவேற்றும் போர்ப்பாடல்கள்

அறிவு தேடும் பருவத்தில் மது சூது
குழி தோண்டுகிறது சூழல் சமூகம்
கை கால் விலங்கு இறுக்கப்படுகின்றது

மோர்ப்பந்தல் தாகம் தணிக்கிறது
வள்ளல்கள் மொய் எழுதுகின்றனர்

சிற்பத்தின் முகத்தில் மகிழ்ச்சி மலர்கிறது
முள்ளில் நடக்கின்ற பேச்சு வார்த்தைகள்

மரணத்தை மூடியே மழை பெய்கிறது
மரபுத் தொடர்ச்சி பேசுகின்ற அரசியலில்
ஆணவ, கௌரவக் கொலைகள்



வெண்ணெய் உருகவில்லை
வேம்பு காய்க்கவில்லை
வெற்றிலை புதைத்த ஈரமண்ணில்
வியர்வைத் துளிகள் அரும்புகின்றன

எலும்புக் கூடுகளின் முதுகில்
நாற்காலிகள் போட்டு அமர்ந்து
ஆறுதலாக
அரசியல் தீர்வு பேசுகின்றன
எரிகுண்டுச் சாம்பல் பொம்மைகள்



முத்துராஜா

# MORTGAGE & LINE OF CREDIT

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் ( OAC*)

⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC - No Income Required*)

⇒ **Private Mortgage** (No Income Verification)

⇒ ரீபைனான்ஸ்,Title Transfer, ரினிவல்

⇒ 2வது, 3வது மோட்கேஜ் (Funded within 48hrs)

⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கான மோர்ட்கேஜ்

⇒ எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க

⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

**கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல்**
**வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?**

MORTGAGE CLINIC



ஜெ(Jey)இராசதுரை
MBA. BBA (Hon) AMP

Team Leader / Mortgage
& Real Estate Broker

**Cell : 416-624- 4843**



www.mortgageclinicanada.com

**416-613-2788 / 416-816-9011**

RIGHT AT HOME REALTY INC.

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

Brokerage: 1396 Don Mills Rd, Unit B121Toronto ON M3B 0A7 Corp office : 200-2005 Sheppard Ave E, Toronto ON M2J 5B4

# NOTARY PUBLIC & LEGAL SERVICES

**Notarizations, Certifications & Commissioning**

* Affidavits
* Certification of True Copy
* Preparation and Notarize the Letter of Invitation
* Commissioning Statutory Declarations and Solemn Affirmations
* Power Of Attorney & Will

* Small Claims
* Landlord & Tenant Matters
* Business Registration & Renewal

AAA Legal Services
AAA LEGAL SERVICES
PROFESSIONAL CORPORATION

**Call:(416) 814 -7450**
(Markham Rd & HWY 401 - Scarborough)

** Promotional Rate for students
$20per sign

# யார் சரி என்பதை விட, எது சரியானது என்பதே இன்றுள்ள அவதானிப்பு!




தமிழ் தேசியக் கட்சிகளின் அண்மைய நகர்வுகள் குறித்து பொதுவெளியில் அவதானம் செலுத்தப்பட்டு வருகின்றது.

முதலாவது, இந்திய அரசாங்கத்திற்குத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ் தேசியக் கட்சிகள் இணைந்து அனுப்பிய கடிதம். இரண்டாவது, பயங்கரவாத தடைச் சட்டத்தை முழுவதுமாக நீக்கக்கோரி வடக்கு, கிழக்கு மற்றும் கொழும்பில் மேற்கொள்ளப்பட்ட கையெழுத்துப் போராட்டம். மூன்றாவது, வடக்கு கிழக்கில் இடம்பெறும் காணி அபகரிப்பிற்கு எதிர்ப்பு தெரிவித்து வடக்கு, கிழக்கின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொழும்பில் ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக நடத்திய போராட்டம். அத்துடன், தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலினுக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு மற்றும் உலகத் தமிழர் பேரவை இணைந்து எழுதியுள்ள பாராட்டுக் கடிதம்.

இதில் முதலாவதாக, இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் உருவான 13ஆம் திருத்தச் சட்டத்தை முழுமையாக அமல்படுத்த இலங்கைக்கு அழுத்தம் கொடுக்குமாறுகோரி, இந்திய அரசாங்கத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடித ஆவணம் குறித்து விமர்சனங்கள் எழுந்தன. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணி அதனை கடுமையாக எதிர்த்து போராட்டங்களை முன்னெடுத்தது. இதனையடுத்து சம்பந்தப்பட்ட தமிழ் தேசிய கட்சிகள் ஊடக சந்திப்புகளை நடத்தி தங்கள் பக்க விளக்கங்களை வழங்கின.

இதனை விடவும், கட்சி சார்பற்ற பொதுவான கருத்தாளர்களும் கருத்தரங்குகளில் இது தொடர்பில் நடுநிலை கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர். தனியார் தொலைக்காட்சிகளில் எதிரெதிர் தரப்புகள் விவாதங்களை நடத்தும் நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன. இவற்றிலிருந்து பொதுமக்களுக்கு ஒரு தெளிவுநிலை ஏற்படத் தொடங்கியுள்ளது.

சில தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்திலிருந்து இயங்கும் தனியார் தொலைக்காட்சி ஒன்றில் ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரனும், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செ.கஜேந்திரனும் நேரடி விவாதத்தில் கலந்துகொண்டனர். மூன்று கருத்தாளர்களும் கலந்து கொண்டனர். அவர்கள் சம்பந்தப்பட்ட கட்சிகளின் ஆதரவாளர்கள் போன்றும் தெரிந்தது. அவர்களின் கேள்விகளுக்கு சுரேஸ் பிரேமச்சந்திரனும், கஜேந்திரனும் விளக்கமளித்தனர்.

இதன்போது கஜேந்திரன் சில கேள்விகளுக்கு நேரடியாக விளக்கமளிக்க முடியாமல் திணறியதை அவதானிக்க முடிந்தது. இன்று இலங்கை அரசாங்கத்தினால் புதிய அரசியல் அமைப்பு உருவாக்கம் பற்றி பேசப்பட்டு வரும் சந்தர்ப்பத்தில் 13ஆம் திருத்தச் சட்டத்தை அமல்படுத்த உதவும்படி இந்தியாவிடம் இவர்கள் கோருகின்றனர். இலங்கை அதனை ஏற்றுக்கொண்டுவிட்டால் என்ன செய்வது? சமஸ்டி முறையிலான அதிகாரப் பகிர்வை நாம் கோரி வருகின்ற நிலையில் இது இல்லாமல் போய்விடுமல்லவா? என்று கஜேந்திரன் சிறுபிள்ளைத்தனமாகக் கருத்துக்களை வெளியிட்டார்.

இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய தலைமையிலான இந்த அரசாங்கம் நிச்சயமாக 13ஆம் திருத்தச் சட்டத்தில் உள்ள எந்தவொரு முக்கிய விடத்தையும் புதிய அரசியலமைப்பில் சேர்த்துக்கொள்ளாது என்பது சாதாரண பொதுமக்களுக்கே தெரியும். ஜனாதிபதி தமிழர்கள் வாழும் பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி மட்டுமே தமிழ் மக்களுக்கான தீர்வு என்று வெளிப்படையாகவே அறிவித்து விட்டார். இந்த நிலையில், அரசாங்கத்தின் புதிய அரசியலமைப்பு தொடர்பில் நம்பிக்கை வைப்பது என்பது சிறுபிள்ளைத்தனமானது மட்டுமன்றி முட்டாள்தனமானதும் கூட.

13ஆம் திருத்தச்சட்டம் ஒரு தொடக்கப் புள்ளி. அது தீர்வு இல்லை. சமஸ்டி முறையிலான அதிகாரப் பகிர்வே தீர்வு என்பதை அனைவருமே ஏற்றுக்கொள்கின்றோம். நாம் இந்தியாவுடன் தமிழர் பிரச்சினை தொடர்பில் உத்தியோகபூர்வமாக ஒரு பேச்சுவார்த்தையை தொடங்குவதற்கான ஒரு வெளியை உருவாக்க வேண்டும் அதற்கான ஓர் ஆரம்பமே இந்தியாவிடம் விடுத்துள்ள கோரிக்கை என்பது தமிழ் தேசிய கட்சிகளின் விளக்கமாக உள்ளது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட கட்சிகள் இந்தியாவின் அடிமைகளாக செயற்படுவதாகவும், இந்தியா சொல்வதை அப்படியே ஏற்றுக்கொள்பவர்களாக இருப்பதாகவும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி குற்றம்சாட்டுகின்றது. இப்படிக் கூறும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி அண்மையில் இந்திய மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடிப்பதை தடை செய்ய வேண்டும் என்ற கருத்துப்பட நாடாளுமன்றத்தில் ஒரு பிரேரணையை கொண்டு வர முயற்சித்தபோது இந்தியத் தூதரகத்திலிருந்து வந்த ஒரு தொலைபேசி அழைப்பையடுத்து அதனை கைவிட்டது.




இது தொடர்பாகவும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியிடம் கேள்விகள் எழுப்பப்பட்டபோது அதற்கு சரியான விளக்கங்கள் அளிக்கப்படவில்லை. குறித்த பிரேரணை இந்தியாவிற்கு எதிரானது என்றும், மீனவர் பிரச்சினைக்கு இந்தியா தீர்வு தரும் என்றும் தொலைபேசியில் உரையாடியவர் உறுதியளித்ததாகவும் அதனால் தாங்கள் குறித்த பிரேரணையை கைவிட்டதாகவும் கஜேந்திரன் கூறினார். தமிழ் பிரதேச மீனவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும் என்று கூறி ஒரு பிரேரணையை கொண்டுவர முற்பட்டபோது இந்தியத் தரப்பின் ஒரு தொலைபேசி அழைப்பினையடுத்து அதனை கைவிட வேண்டி ஏற்பட்டது என்றால் உங்கள் நேர்மையும் துணிவும் எங்கு போனது என்று மக்கள் கேட்கின்றனர். எல்லாமே வெறும் வாய்ச் சொல் வீரம்தானா? இந்தக் கருத்தாடல்கள் விவாதங்கள் மூலம், தமிழ் தேசிய மக்கள் முன்னணி அரசியல் காழ்ப்புணர்வு காரணமாக அதன் எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது என்பதே வெளிப்படுத்தப் படுகின்றது. தமிழ் மக்கள் இது தொடர்பில் அவதானிப்பு செலுத்தி வருகின்றனர்.

அடுத்ததாக- பயங்கரவாத தடைச் சட்டத்தை முழுவதுமாக நீக்கக் கோரி தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஏற்பாட்டில் வடக்கு கிழக்கு மற்றும், கொழும்பிலும் கையெழுத்துப் போராட்டங்கள் இடம் பெற்றன. இதில் சிங்கள தலைவர்களும் கையெழுத்திட்டுள்ளனர். தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச் சட்டத்தில் திருத்தங்களை கொண்டு வந்து புதிய சட்டம் ஒன்று உருவாக்கப்படவுள்ளதாக அரசாங்கம் தெரிவித்து வருகின்ற நிலையில், பயங்கரவாத தடைச்சட்டம் என்பதே வேண்டாம்- அதனை முழுவதுமாக இல்லாதொழிக்க வேண்டும் என்று போராட்டங்களை முன்னெடுப்பது இந்த காலகட்டத்தின் தேவையே. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 49ஆவது அமர்வு ஆரம்பமாகியுள்ள சூழ்நிலையில் இது பொருத்தமான ஒன்றே.

வடக்கு கிழக்கில் இடம்பெறும் காணி அபகரிப்பிற்கு எதிர்ப்பு தெரிவித்து வடக்கு, கிழக்கின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொழும்பில் ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக கடந்த 24ஆம் திகதி நடத்திய போராட்டமும் குறிப்பிடத்தக்கதொரு விடயம். வடக்கு கிழக்கில் தமிழ் மக்களின் பிரதிநிதிகளான நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதனை மேற்கொண்டிருந்தனர். மக்களை வீதியில் இறக்கிப் போராட்டங்களை நடத்தியவர்கள் இன்று தாங்கள் களத்திறங்குவது வரவேற்கத்தக்கதாகும். இதில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும், மற்றும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரனும் பங்கேற்றனர். தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார், கஜேந்திரன் ஆகிய இருவரும் கூட இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளை கருத்திற்கொண்டு அரசாங்கத்தை தர்மசங்கடத்தில் ஆழ்த்தும் சதியே வடக்கு, கிழக்கு மாகாணங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்னெடுத்துள்ள இந்தப் போராட்டம் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு உடனடியாகவே கருத்து தெரிவித்ததிலிருந்து இந்த போராட்டத்தின் முக்கியத்துவத்தை புரிந்து கொள்ளலாம்.

தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு மற்றும் உலகத் தமிழர் பேரவை இணைந்து எழுதியுள்ள பாராட்டுக் கடிதமும் ஒரு முக்கிய இராஜதந்திர நடவடிக்கையாகும். இந்திய முதலமைச்சர்களில் ஓர் ஆளுமை மிக்க முதலமைச்சராகவும் சிறந்த நிர்வாகியாகவும் பார்க்கப்படுகின்ற மு.க.ஸ்டாலின் தமிழகத்தில் மக்கள் செல்வாக்கு மிக்கவராகவும் மிளிர்கின்றார்.

இலங்கையில் உரிமை கோரி போராடும் தமிழ் மக்களுக்கு அவரது உதவிகள் அவசியமானது. தமிழ் தேசியக் கூட்டமைப்பு இந்திய மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பியுள்ள உத்தியோகபூர்வ கடிதத்திற்கு பதிலளிக்கும் பொறுப்பு மத்திய அரசாங்கத்திற்கு உள்ளது. “பந்து இப்போது இந்தியாவின் பக்கம்” என நடுநிலை கருத்தாளர்கள் தெரிவிக்கின்றனர். இது தொடர்பில் தமிழகத்தின் அழுத்தமும் இந்திய மத்திய அரசாங்

(தொடர்ச்சி 07ஆம் பக்கம்...)

விளம்பரம்
VLAMBARAM
32ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: பிரசாந்தி அருள்தாசன்
பதிப்பு: Canyon Press Inc.

‘விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்’ நிறுவனத்தால் வெளியிடப்படும் ‘விளம்பரம்’ பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059/ FAX: 416-286-0344
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved


# ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 49ஆவது அமர்வில் இலங்கைக்கு அழுத்தங்கள் வருமா?

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 49ஆவது அமர்வு கடந்த 28ஆம் திகதி ஜெனிவாவில் ஆரம்பமாகியுள்ளது. ஏப்ரல் முதலாம் திகதி வரை இந்த அமர்வு நடைபெறும். இதில் இலங்கை தொடர்பாக எதிர்வரும் மார்ச் மாதம் 03ஆம் திகதி உரையாடல் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த அமர்வின்போது இலங்கை தொடர்பிலான புதுப்பிக்கப்பட்ட எழுத்து மூல சமர்ப்பணத்தை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட் முன்வைக்கவுள்ளார். இக்கூட்டத் தொடரில் கலந்து கொள்வதற்காக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தலைமையிலான விசேட பிரதிநிதிகள் குழு ஜெனிவாவிற்கு சென்றுள்ளது. மேலும், இலங்கை தொடர்பான அறிக்கை ஏற்கனவே அரசாங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ள நிலையில் இலங்கை சார்பில் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் அதற்கு பதிலளித்து உரையாற்றவுள்ளார்.

இலங்கை குறித்த அறிக்கையை ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பெச்லெட் முன்வைக்கவுள்ள நிலையில் இந்த அறிக்கையின் பிரதி இலங்கைக்கு ஏற்கனவே கிடைக்கப்பெற்றுள்ளது. பயங்கரவாத தடைச் சட்ட நீக்கம், ஈஸ்டர் தாக்குதல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து அந்த அறிக்கையில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதன்படி பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குமாறு இம்முறை இலங்கைக்கு மனித உரிமைகள் பேரவையில் அழுத்தம் கொடுக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் இலங்கையில் கடந்த 2019 ஏப்ரல் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நடத்தப்பட்ட பயங்கரவாத தாக்குதல் குறித்து இலங்கை அரசாங்கம் இதுவரையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் கேள்விகள் எழுப்பப்படலாம். அதற்கான நகர்வுகளை கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் மேற்கொண்டுள்ளார். நடத்தப்பட்ட பயங்கரவாத தாக்குதல் தொடர்பில் முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்படவில்லை என்றும் அனைத்தும் மூடிமறைக்கப்படுவதாகவும் அவர் தொடர்ந்து குற்றம்சாட்டி வருகின்றார்.

தற்போதைய அரசாங்கத்தையோ அல்லது சட்டமா அதிபர் திணைக்களத்தையோ இனியும் நம்ப முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலை முன்கூட்டியே அறிந்திருந்தும் தடுக்க முடியாத அதிகாரிகள் மற்றும் அரச தலைவர்களுக்கு அரசாங்கம் வழங்கிய பாதுகாப்பு தொடர்பில் கர்தினால் தனது ஏமாற்றத்தை வெளிப்படுத்தியுள்ளார். அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். இந்நிலையில்தான் சர்வதேசத்திற்கு இப்பிரச்சினையை கொண்டு செல்லவிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.



இந்நிலையில் பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை விசேட தூதுக் குழுவினருடன் கடந்த 23ஆம் திகதி வத்திகான் நோக்கிப் பயணித்துள்ளார். இந்த பயணத்தின்போது பேராயர், கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான புனித திருத்தந்தை பிரான்சிஸை சந்தித்துப் பேசுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. இச்சந்திப்பில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் இலங்கை அரசாங்கம் நடந்துகொள்ளும் விதம் குறித்தே அதிகம் பேசப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை பேராயர் ஜெனீவாவிற்கும் இந்தப் பிரச்சினையை கொண்டு செல்லவுள்ளார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதேவேளை, உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதல் தொடர்பான சாட்சியங்கள் மறைக்கப்பட்டதாக முன்வைக்கப்படும் பேராயரின் குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை என நீதியமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளமையினையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

பிரதான சந்தேக நபர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ள 26 பேருக்கு எதிராக சட்டமா அதிபரால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக நீதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். விசாரணைகள் தொடர்பில் எதுவும் மறைக்கப்படவில்லை என்றும், தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் என கருதப்படும் விடயங்கள் மாத்திரமே வெளிப்படுத்தப்படாமல் உள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்த விடயங்கள் வெளிப்படுத்தப்படுவதற்கு முன்னர் அது குறித்து ஆராயுமாறு ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையிலும் வலியுறுத்தப்பட்டுள்ளது. எனவே, அதனை வெளியிடுவதா இல்லையா எனகின்ற இறுதி தீர்மானத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவே மேற்கொள்வார் என்றும் நீதியமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார். இந்த நிலையில், 69 ஆயிரத்திற்கும் அதிகமான பக்கங்களைக் கொண்ட ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை சபாநாயகரிடம் கடந்த வாரம் கையளிக்கப்பட்டுள்ளது.

87 புத்தகங்களில் 69 ஆயிரத்து 800 பக்கங்களைக் கொண்டுள்ள இந்த அறிக்கையை வாசித்தறிவது சிரமமான காரியமாக இருக்கும். நீண்ட நாட்களும் எடுக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. வாசிப்பதற்கு இலகுவாக மென் பிரதியில் இந்த அறிக்கையை தங்களுக்கு வழங்குமாறு ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டாக சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை இப்போது வெளிவந்துள்ளமைக்கு ஜெனீவாவை சமாளிக்கும் நோக்கமே உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. ஆக, ஜெனீவாவில் இம்முறை நடைபெறும் மனித உரிமைகள் பேரவை அமர்வில் இலங்கை தொடர்பான கருத்தாடலின்போது பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்க வேண்டும் என்ற கோரிக்கையும், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் இலங்கை அரசாங்கம் இதுவரை முறையான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் இழுத்தடிப்பது குறித்த குற்றச்சாட்டும் அழுத்தம் பெறும் என்றே எதிர்பாரக்கப்படுகின்றது.

போர்க் குற்றங்கள் தொடர்பிலோ, மனித உரிமை மீறல்கள் தொடர்பிலோ இலங்கையின் பொறுப்புக் கூறல் பற்றியோ கடந்த அமர்வுகளில் பேச்சப்பட்ட விடயங்களே இம்முறையும் ஒரு சம்பிரதாயத்திற்காகப் பேசப்படலாம். நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப்படுவதற்கான வாய்ப்புகள் இல்லை. இன்று இலங்கை பொருளாதாரத்தில் கடுமையான வீழ்ச்சியை சந்தித்து வரும் நிலையில் இலங்கைக்கு எதிராக பொருளாதார தடைகள் போன்ற அழுத்தங்கள் எவையும் அறிவிக்கப்பட மாட்டாது என்றே நம்பலாம். எனவே, இம்முறையும் இலங்கை அரசாங்கம் தப்பித்துக்கொள்ளும்.

## யார் சரி...

06ஆம் பக்கத்தொடர்ச்சி




கத்திற்கு தேவைப்படுகின்றது. இதனை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கவனத்தில் எடுப்பார் என்றே நம்பப்படுகின்றது. ஆகவே, இன்றைய சூழ்நிலையில் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் அறிவுபூர்வமான நகர்வுகளில் தொடர்ந்து ஈடுபடுவது அவசியமானது. கட்சி அரசியலை கைவிட்டு தமிழர் பிரச்சினையை முன்னகர்த்திச் செல்லும் நகர்வுகளில் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகவுள்ள அனைத்து தரப்பினரும் ஒன்றிணைய வேண்டும்.

இந்த தருணத்தில் எந்தக் கட்சி சரி அல்லது யார் சரி என்பதற்கு அப்பால் எது சரியானது என்பதையே தமிழ் மக்கள் கவனிக்கின்றனர்.

**சரியோ, தவறோ தைரியமாக எதையும் வெளிப்படையாக பேசக்கூடியவர்கள் யாருக்கும் துரோகியாக மாற மாட்டார்கள்..!!**

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!

• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE Tel: 416-289-7514
OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# இன்னல் நீக்கும் இயற்கை - 84



– அகணி –
authorakani@gmail.com

டாக்டர் எல். மகாதேவன் அவர்கள் எழுதிய 'அமுதே மருந்து' என்ற நூலினை வாசிக்கும் வாய்ப்புக் கிட்டியது. டாக்டர் எல். மகாதேவன் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் தெரிசனங்கோப்பு என்ற கிராமத்தில் ஆயர்வேத வைத்தியம் செய்து வருகின்றார். இவரால் 'உணவே மருந்து' என்றொரு நூலும் வெளியிடப் பட்டது. சில உணவுப் பொருட்களால் உடலில் ஏற்படக் கூடிய மாற்றங்கள், பாதிப்புகள் பற்றிய இவர் கூறிய கருத்துக் களை அடிப்படையாக வைத்து சற்று ஆராய்ந்து கொள்வோம். பச்சரிசியை உண்பதால் வன்மையும், கோபமும் உண்டாகும். ஆனால் இயற்கையாக சூடான உடல் வெப்பநிலை கொண்டவர் களுக்கு பச்சை அரிசி நல்லது. புழுங்க லரிசியை உண்பதால் உடலுக்கு வன்மையைத் தராது. புழுங்கலரிசி சிறந்த பத்திய உணவாகக் கருதப்படுகிறத. முதல் நாள் சமைத்த சோற்றை நீர் ஊற்றி வைத்து மறுநாள் பழைய சோறாகச் சாப்பிடும் பொழுது வாந்தி, பிரட்டல் போன்ற குணங்கள் நீங்கும். மிகவும் புளித்த சோறு நல்லதல்ல. சிவப்புச் சம்பா சிறந்தது. இது மூன்று தோசங்களையும் நீக்க வல்லது. கண்ணின் ஆரோக்கியத் திற்கு நல்லது. குரல்வளைக்கு வன்மையைக் கொடுக்கும். இதய நலத்திற்கு நல்லது. அரிசி அவிந்து கொண்டிருக்கும் பொழுது கொதி கஞ்சியை எடுத்து நெய் சேர்த்துக் காலை நேரத்தில் சாப்பிட மலச்சிக்கல், குடல் வறட்சி, சிறுநீர் பாதையில் எரிவு போன்ற பிரச்சினைகள் நீங்கும். புழுங்கலரிசி கஞ்சிக்கு ஏற்றது. சாதத்தை வடித்தெடுத்த கஞ்சி ஆறியதும் உறையும் தன்மை கொண்டது. இதற்கு மோரும், உப்பும் சேர்த்து சாப்பிடலாம். இந்தக் கஞ்சியைத் தோலில் தேய்த்துக் குளிக்க தோலில் மென்மை ஏற்படும்.




கேழ்வரகு(ராகி)யினை பஞ்சந்தாங்கி என்றும் அழைப்பர். இது வாதத்தை உருவாக்கும் தன்மை கொண்டது. இதனைக் கூழாகவும், களியாகவும் செய்து இரண்டு அல்லது மூன்று தினங்கள் வைத்துச் சாப்பிடலாம். இது தசைகளுக்கு வலு வழங்க வல்லது. கடுமையான வேலை செய்வோர் இதனைச் சாப்பிட்டால் களைப்பின்றி அதிக நேரம் வேலை செய்ய முடியும். இது எளிதில் சமிபாடு அடையமுடியாத உணவு. நீரழிவு நோயுள்ளவர்கள் இதனைச் சாப்பிட்டால் அதிகளவு சிறுநீர் வெளிப்படுதலைக் குறைக்கும்.

வரகுச் சோறு உண்பதால் அதிக கொழுப்புச் சத்து கிடைக்கும். இந்த உணவு சுவாசப் பிரச்சினை, பித்த ஆதிக்கம் உள்ளவர்களுக்கு ஏற்றதல்ல.

தினை உடலிற்கு வலிமை கொடுக்கும். வாதம், கபம் போன்றவற்றிற்கு நல்ல உணவு. தசைகளை இறுகச் செய்யும். தினைக் கூழினைப் பிரசவம் பெற்ற பெண்கள் அருந்துவது நல்லது.

பார்லி வலிவு கொடுக்கும். சிறுநீரை அதிகளவில் வெளியேற்றும். இரைப்பை மற்றும் குடல் அழற்சியைப் பெருக்கும். தொண்டைப் புண், நாவறட்சி போன்றவற்றை நீக்கும். பாசிப்பயறு வாயுவை ஏற்படுத்தும். பாசிப்பயற்று மாவை மார்பில் வைத்துக் கட்டினால் பெண்களுக்குப் பால்க்கட்டு குறையும்.

உழுந்து பெண்களின் கருப்பைக்கு பலத்தையும், வளர்ச்சியையும் கொடுக்க வல்லது. உளுந்தையும், எள்ளையும் உணவில் அதிகளவு சேர்ப்பது நல்லது. உளுந்து தாய்ப்பாலினைப் பெருக்கும் தன்மை வாய்ந்தது.

எள்ளு வாயுவைக் குறைக்கும். தலைமயிர் செழிப்பாக வளர உதவும். இரத்தக் கட்டைக் குறைக்கும். தொண்டைப் புண்களை ஆற்றும். உடல் வலிவு கொடுக்கும்.

கொள்ளு துவர்ப்பும், கைப்பு சுவையும் கொண்டது. உடற் சூட்டைப் பாதுகாக்கும். சளி, மார்புச் சளி இவற்றால் துன்பப்படுபவர்களுக்கு ஏற்ற உணவு.

சவ்வரிசி இனிப்பும், குளிர்ச்சியும் கொண்டது. குடலின் அழற்சியை நீக்கும்.

முள்ளங்கி உடலில் உள்ள வாயுத் தன்மையை நீக்கக் கூடியது.

வாழைக்கிழங்கிலும், தண்டிலும் உள்ள நீரைப் பருக சிறுநீரக அழற்சி, நீர்க்கல்லடைப்பு போன்றவற்றில் இருந்து நிவாரணம் கிடைக்கும்.

வெங்காயத்தை நெய்யில் வதக்கிச் சாப்பிடுவது மூலப் பிரச்சினைகளுக்கு நல்லது. வெங்காயத்தை கடுகெண்ணெய் சேர்த்தரைத்து மூட்டுக்களில் பூச மூட்டுக் களில் உள்ள வீக்கம், வலி குறையும். சிறு வெங்காயமே மருத்துவக் குணம் அதிகமாகக் கொண்டது. அதில் அதிக மான இரும்புச் சத்து உண்டு. வெங்காயம் சுரம், சலதோசம், இருமல், வயிற்று வலி ஆகியவற்றின் பாதிப்பைக் குறைக்கும். தோல் சம்பந்தமான வியாதிகளுக்கும் வெங்காயம் நிவாரணம் கொடுக்கும். தோல் நீக்கிய வெங்காயத்தை நறுக்கி தயிரில் உப்பும் கலந்து ஊறவைத்து நாளில் இருவேளை சாப்பிட்டு வந்தால் மூலத்திலிருந்து வெளிப்படும் ரத்தம் தடைப்படும். வலி குறையும்.

இளநீர் பித்தக் குடல், சிறுநீர் தொடர்பான நோய்களிலிருந்து நிவாரணம் பெற உதவும். சிறுநீர்ப்பாதையில் உள்ள அழற்சியை நீக்கி சிறுநீரை வெளி யேற்றும். அதிகம் முற்றாத தேங்காய் வயிற்றுப் புண்ணை ஆற்ற உதவும். தேங்காய்ப் பாலை வாயில் விட்டுக் கொப்பளிக்கத் தொண்டை, வாய், நாக்கு போன்றவற்றில் ஏற்படும் அழற்சி குறையும்.

கடந்த வாரம் கீரைகள் சிலவற்றை எடுத்து அவற்றின் மருத்துவக் குணங்களை ஆராய்ந்தோம். அதன் தொடர்ச்சியாகச் சில கீரை வகைகளைக் கவனிப்போம்.



கரிசலாங்கண்ணி பொதுவாக வயல்களில் வளர்ந்திருப்பதைக் காணலாம். இது இரத்தத்தைச் சுத்திகரிக்கும் தன்மை வாய்ந்தது. கண் பார்வைத் தெளிவிற்கு மிகவும் நல்லது. உடலுக்கு உரத்தை ஊட்டும் தன்மை கொண்டது. மண்ணீரலில் ஏற்படும் வீக்கத்தைக் குறைக்கும்.

கறிவேப்பிலையை சங்க காலத்தில் கஞ்சக நறுமுறி என்ற பெயரால் அழைக்கப்பட்டது. கறிவேப்பிலையில் 60 சதவீதம் நீர் சத்தும், 6.9 சதவீதம் புரதச்

தொடர்ச்சி 10ஆம் பக்கம்...)

**அன்பான விளம்பரம் வாசகர்களே!**

இயற்கை வளங்களால் எவ்வாறு இன்னல் நீங்கி வாழலாம் என்று அறியும் பொருட்டு எழுந்த தேடலால் கிடைத்த தகவல் பதிவாக அசைந்து கொண்டிருக்கும் இந்தத் தொடர்கட்டுரை எமது பொது அறிவை விருத்தி செய்யும் நோக்குடன் எழுதப்படுகின்றது. இக்கட்டுரையில் கூறப்படும் கருத்துக்கள் இயற்கை சார்ந்து இருந்தாலும் உங்கள் உடல்நிலைக் கேற்ப பொருத்தமான மருத்துவக் கருத்துக்களாக அமைந்து விடாது என்பதைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளுங்கள். எப்பொழுதும் பொருத்தமான வைத்திய ஆலோசனையை மேற்கொள்ளுங்கள் என்று வலியுறுத்திக் கூறிக்கொள்கின்றேன். ஆனாலும் நாம் இயற்கையோடு இணைந்து வாழ்வதற் கான தகவலையும், விழிப்புணர்வையும், ஆரோக்கியமாக வாழ்வதற்கு வேண்டிய பொதுவறிவையும் இந்தக் கட்டுரை வழங்கும் என்று நம்புகின்றேன்.

நாமும் நன்றாக வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும்.




Mahindan Mailvaganam, B.Sc., M.Sc.
Senior Insurance Specialist
Elite Field Sales Advisor
RBC Insurance
WOODSIDE SQUARE MALL (McCowan & Finch)
1571 Sandhurst Circle
Scarborough, ON M1V 1V2
mahindan.mailvaganam@rbc.com
Cell: 416-262-4973

- Universal Life Insurance
- Term (10 to 40 years) Insurance
- Term 100
- Non Medical Insurance
- Critical Illness Insurance
- Disability Insurance
- Travel Insurance
- RRSP
- TFSA

உங்கள் வாகனத்தின் மாதாந்த காப்புறுதி கட்டணம் அதிகரிக்கப்பட்டிருந்தால் எமது காப்புறுதி ஆலோசகர்களால் உங்களுக்கு உதவ முடியும்!

RBC Insurance
Life | Health | Auto | Home | Travel | Wealth

# "ஆயுள் காப்புறுதி உடன்படிக்கைகளும் தூய்மையற்ற பணத்தினை தூய்மையாக்குதலும்"




"ஆயுள் காப்புறுதி உடன்படிக்கைகளும் தூய்மையற்ற பணத்தினை தூய்மை யாக்குதலும்"

"ஆயுள் காப்புறுதி உடன்படிக்கைகள் ஊடாகத் தூய்மையற்ற பணத்தினை துப்பரவான பணமாகக் கனடாவில் பலரும் மாற்ற முயலலாம்.

சுதந்திரமாக இயங்கும் காப்புறுதி முகவர்களும் தெரிந்தோ தெரியாமலோ இவற்றிற்கு உடந்தையாக இருக்கலாம்" (The Life Insurance Products are attractive to money launderers) என்றதொரு சந்தேகப் பார்வையோடு தமது சந்தேகங்களை நிவர்த்தி செய்தே உடன்படிக்கைகளை ஏற்றுக்கொள்ளும் வழமை காப்புறுதிக் கம்பனிகளிடம் இருந்து வருவது மரபு ரீதியானதாகும். எமது முகவர் தொழிலில் இதனை எதிர்கொண்ட அனுபவங்கள் பல உண்டு.

'தூய்மையற்ற பணம்' என்பது, சட்ட விரோதமாக சம்பாதிக்கும் கறுப்புப் பணத்தினைக் குறிக்கும். அதனை ஆயுள் காப்புறுதி உடன்படிக்கைகளுக்குப் பின்னால் பதுக்கி கொஞ்ச காலம் வைத்திருந்துவிட்டு தொடர்ந்து சட்ட ரீதியான பணமாக இலகுவாக மாற்ற முயலலாம் என்பதே அவர்களது சந்தேக மாகும். 'துப்பரவான பணம்' என்பது சட்டரீதியான பணத்தினைக் குறிக்கும்.

காப்புறுதி எவர் பெயரில் செய்யப்படு கின்றது?

காப்புறுதி உடன்படிக்கையாளர் யார்?




பணம் செலுத்துபவர் யார்?

இவர்கள் செய்யும் தொழில் என்ன?

இவர்களின் பொருளாதார வலிமை என்ன?

இதுபோன்ற காப்புறுதிக் கம்பனிகளின் புலன் விசாரணைகளுக்கு, வாடிக்கை யாளருக்கும் கம்பனிக்கும் இடையில் செயல்படும் முகவரின் பங்களிப்புப் பொறுப்பு வாய்ந்ததாகும்.
சட்ட ஒழுங்குகளை அனுசரித்து, கோப்பு களை தயார் செய்து, பத்திரங்கள் யாவற்றினையும் ஒழுங்காக வைத்திருந்து காப்புறுதித் துறைகளோடு சம்பந்தப்பட்ட தொழில்களைத் தொடர்வதால் எந்தவொரு சந்தேகப் பார்வைக்கும் நிமிர்ந்து நின்று பதில் சொல்லக் கூடியதாக இருக்கும். இதன்மூலம் காப்புறுதி உடன்படிக்கை செய்தவர்களையும் பாதுகாத்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

சந்தேகப் பார்வைகளுக்கு, சட்டங்களை அனுசரித்துப் போவோர் எவரும் மூன்றாம் உலக நாடுகளினைப்போல் அல்லாது கனடாவில் எதற்கும் அஞ்சாது நிமிர்ந்து நிற்கலாம்.

என்ன மாதிரியான ஆயுள் காப்புறுதி உடன்படிக்கையில் கறுப்புப் பணத்தினை கனடாவில் சட்டரீதியான பணமாக மாற்றலாம்? என்ற அவர்களின் சந்தேகத் திற்குப் பின்வரும் திட்டத்தினை இங்கு குறிப்பிடலாம்.

"முதலீட்டுத் திட்டங்களுடன் சேர்ந்த ஒரு நிரந்தரமான ஆயுள் காப்புறுதி உடன் படிக்கை" (UNIVERSAL LIFE INSURANCE PLAN) இங்கு ஆயுள் காப்புறுதி என ஒரு தொகை (Death Coverage) மற்றும் அதனோடு சேர்ந்த முதலீட்டுத் திட்டம் (Investment plans) என இரு பிரிவுகள் சேர்ந்திருக்கும்.

ஆயுள் காப்புறுதித் தொகைக்கு என ஒரு கட்டணம் மாதாமாதம் அல்லது வருடா வருடம் செலுத்த வேண்டும். (Insurance cost)

அதற்கு மேலால் ஒரு குறிப்பிட்ட வரை யறைவரை செலுத்தும் தொகை முதலீட்டுத் திட்டத்தில் சேர்கின்றது. இம் முதலீட்டின் வளர்ச்சிக்கோ அல்லது பணத்தினை மீளப்பெறும் போதோ வரி எவையும் செலுத்தத் தேவையில்லை. எப்போதும் பணத்தினை மீள்பெறலாம். ஒரு தொகைப் பணத்தினை இம் முதலீட்டுத் திட்டங்களில் வைப்பு செய்யலாம்.

உயிர் இழப்பு நடந்தால் குடும்பத்தவர் களுக்கு ஆயுள் காப்புறுதித் தொகை யுடன் இந்த முதலீட்டுத் தொகைப் பணத்தினையும் சேர்த்து வழங்குவர்.

ஆயுள் காப்புறுதிப் பணம் பெருந்தொகை யாக உயிர் இழப்பின் பின்பு குடும்பத்தவர் களுக்குப் போய் சேரும்போது, அதற்கு வரி என எவையும் கழிப்பதில்லை.

அதனோடு சேர்ந்த இம்முதலீட்டுத் திட்டத்தின் வளர்ச்சிக்கும் வரி எதுவும் செலுத்தத் தேவையில்லை என்பதால் இக்குறிப்பிட்ட ஆயுள் காப்புறுதித் திட்டத்தினை (Universal Life Insurance Plan) ஓர் சிறப்பான சிறு பணக் கொடுப்பனவுகளில் வளரும் பாரிய ஒரு சொத்தாகக் கனடாவின் நிதியியல் நிபுணர்களினால் அறிவுறுத்தப்படுகின்றது.

# நீர்த்துளியின் உள்ளே சமுத்திரம்

**Words of Peace**

பிறேம் ராவத் பற்றி மேலும் அறிந்துகொள்ள:

**www.timelesstoday.com**

**www.premrawat.com**

சமுத்திரத்திலே நீர்த்துளிகள் உள்ளன. இது எல்லோருக்கும் தெரியும். நீர்த் துளியின் உள்ளே சமுத்திரம் அடங்கி யுள்ளது என்பது சிலருக்கே தெரியும். யார் அந்தத் துளி? யார் அந்தச் சமுத்திரம்? நீங்கள் தான் அந்த நீர்த்துளி. எங்கும் நிறைந்துள்ள சக்தி தான் அந்த சமுத்திரம். அந்த சக்தி தான் மேலேயும் கீழேயும் உங்களின் உள்ளேயும் எங்கும் வியாபித்துள்ளது. அந்த சக்தி எங்கிருந் தும் வரவோ எங்கேயும் செல்லவோ முடியாது. அதனைப் பற்றி நீங்கள் மனதால் எண்ணவும் முடியாது. அது மனதிற்கும் புத்திக்கும் அப்பாற்பட்ட ஒரு பொருள். நீங்கள் செய்யக்கூடிய விடயம் ஒன்றே ஒன்றுதான். அதனை அனுபவிக்க முடியும். நீங்கள் இந்த மானிடப் பிறப்பு எடுத்ததன் நோக்கமே அந்த அனுபவத்தைப் பெறுவதற்காகத்தான் என்று இருக்கலாமா? இது இவ்வுலகில் நடைபெற முடியுமா?

உங்களை ஒரு பானை என எண்ணிக் கொள்ளுங்கள். அப்பானையின் அடியிலே துவாரம் ஒன்றுள்ளது. எல்லாவற்றிற்கும் முதலாக ஒருவர் அந்தப் பானையிலுள்ள துவாரத்தையே அடைப்பார். பானையை நிரப்புவதற்காகத்தான் நாங்கள் இந்தப் பானையை உங்களிடம் கொண்டு வந்தோம், நீங்கள் ஏன் அந்தத் துவாரத்தை அடைப்பதிலேயே ஈடுபட்டிருக் கிறீர்கள் என மக்கள் கேட்கின்றனர். சிந்தியுங்கள் துவாரமுள்ள பானையில் சமுத்திரத்திலுள்ள முழுத் தண்ணீரையும் ஊற்ற முடியுமா? அவ்வாறு ஊற்றினாலும் அந்தப் பானை வெறுமனே காய்ந்து போய்விடும். கல் ஒன்று ஆயிரம் வருட காலம் நதியின் அடியிலோ அல்லது கடலின் கீழேயோ தண்ணீரிலோ மூழ்கிக்கிடந்தாலும் அதனை வெளியே எடுத்துப் போட்டதும் சில நிமிடங் களிலேயே காய்ந்து போய்விடுகிறது. ஏனெனில் நீரைத் தன்வசம் சேமித்து வைத்திருக்கும் இயல்பு அதற்கில்லை. அதேபோலத்தான் பானையில் துவாரம் இருக்கும் வரை தண்ணீரைச் சேகரித்து வைக்கும் இயல்பு அதற்கு இருக்க மாட்டாது. துவாரம் அடைக்கப்படும் போது அந்தப் பானையை நிரப்ப உங்களுக்கு சமுத்திரமளவு தண்ணீர் தேவைப்படாது. அதனுள்ளே ஒரு கைப்பிடியளவு தண்ணீர் விட்டாலும் கூட அந்தத் தண்ணீர் அங்கே தங்கிநிற்கும். நம்முள்ளே ஒரு துவார மல்ல, சல்லடை போன்று ஆயிரக்கணக் கான துவாரங்கள் உள்ளன. அவ்வாறு இருக்கையில் நாமோ அந்த ஞானத்தை நம்முள் நிரப்பி வைத்திருக்க முயற்சி செய்கின்றோம். இது சாத்தியப்படக் கூடிய விடயமல்ல.

ஒருதடவை நான் ஒருநபரிடம் பேசிக் கொண்டிருந்தபோது அவர் நீங்கள் மக்களுக்குக் கொடுக்கும் விடயத்தில் இருந்து ஒரு 'மாதிரி' (Sample) தாருங்கள் என்றார். முதலில் நான் கூறும் விடயத்தை சற்று கேட்டுக் கிரகித்துக் கொள்ளுங்கள் என்று கூறினேன். அதற்கு அவரோ இல்லை தனக்கு ஒரு 'மாதிரி' தரும்படி மீண்டும் மீண்டும் கேட்டார். ஒரு சிறிய மாதிரி அல்ல. நான் கொடுப்பதனை முழுமையாகவே உமக்கு கொடுத்தாலும் கூட உம்முள் அவை தங்கமாட்டாதே எனக்கூறினேன். உம்முள்ளே அத்தனை துவாரங்கள் உள்ளனவே, எல்லாமே வெளியேறிவிடும். உம்மால் அதைப் புரிந்து கொள்ளமுடியாது என்றேன். நான் எது பற்றி இங்கே பேசுகின்றேன் என்பதனை மூளையினால் புரிந்து கொள்ள முடியாது, இதனை புத்தியாலே புரிந்து கொள்ள முடியாது, உள்ளத்தினால் மட்டுமே உணர முடியும்.

நீங்கள் சமுத்திரத்திலே உள்ள ஒரு துளி மட்டும் அல்ல
நீங்கள் சமுத்திரத்தையே உள்ளடக்கிய ஒரு துளி.......

MATH & PHYSICS TUTORING
By a well-qualified and experienced teacher
For all grades from Grade 4 to 1st year of university
Special classes
.Advanced function
.Calculus & vectors
.Data management
All Classes available in Scarborough & Stouffville
Contact: 647.340 .9490 / 416.732.2228


Mr.S.F.Xavier (Teacher)


சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# மகான் - திரைவிமர்சனம்



ஆரணி ஞானநாயகன்

2022இல் வெளிவந்த இத்திரைப்படத்தில் விக்ரம் அவரது மகன் துருவுடன் சேர்ந்து நடித்துள்ளார். 1968இல் சிறுவனான காந்தி மகான் (விக்ரம்) தன்னுடைய நண்பர்களான சத்யா மற்றும் ஞானமுடன் சீட்டு (Cards) விளையாடுகிறார். மகாத்மா காந்தியின் கொள்கைகளைத் தீவிரமாகப் பின்பற்றும் காந்திமகானின் குடும்பத்திற்கு இது தெரியும்போது அவர் கடுமையாகத் தண்டிக்கப்படுகிறார்.

2008ஆம் ஆண்டில் காந்தி மகான் அவரது மனைவி நாச்சி (சிம்ரன்) மற்றும் மகனுடன் மகாத்மா காந்தியின் கொள்கை களைத் தீவிரமாகப் பின்பற்றிக் கொண்டு வருகின்றனர். காந்தி மகானின் மனைவியும், மகனும் ஒருநாள் சுற்றுலா விற்குச் செல்லுகின்றனர். அதிக கட்டுப்பாட்டுடன் வாழும் காந்தி மகானிற்கு அன்று தனது விருப்பத்திற்கு ஏற்றபடி கட்டுப்பாடுகள் இல்லாமல் ஒருநாள் வாழ வாய்ப்புக் கிடைக்கிறது.

அவ்வாய்ப்பை முற்றுமுழுதாகக் காந்தி மகான் பயன்படுத்துகிறார். ஆனால், அந்நாளின் பின்விளைவுகளாகப் பல விடயங்கள் நடக்கின்றன. அவை என்ன? இப்பின்விளைவுகளால் பிரியும் இக்குடும்பம் மீண்டும் ஒன்று சேருமா? என்பதைப் படத்தைப் பார்த்து அறியுங்கள்.

கிட்டத்தட்ட மூன்று மணிநேரம் எடுக்கும் இப்படத்தில் கதாநாயகன், அவரது குடும்பம், நண்பர்கள், எதிரிகள் என்று பல கதாபாத்திரங்கள் வந்து செல்கின்றன. படமும் நன்றாக வடிவமைக்கப்பட்டுள்ளது. விக்ரமும் கட்டுப்பாட்டுடன் நடக்கும்



காந்தி, முதலாளி காந்தி, மகனைத் தேடும் காந்தியென ஒரே கதாபாத்திரத்தைப் பலவிதமாக, நன்றாக நடித்துள்ளார். இதற்கு மாறாக விக்ரமின் மகன் துருவின் நடிப்பில் அவ்வளவு தெளிவு இல்லை.

இப்படத்தின் முக்கிய கருத்து தீவிரக் கொள்கைகளால் ஏற்படும் பிரச்சனை களைக் காட்டுவதாகும். நாச்சியும், அவளது குடும்பமும் மகாத்மா காந்தியின் கொள்கைகளைத் தீவிரமாகப் பின்பற்று கின்றனர். ஆங்கிலத்திரைப்பட போஸ்டர் களைக் காணக் கூடாது. பொய் சொல்லக் கூடாது. ஆனால், அவர்களது மகன் தாதோ, அது ஏன் என்று கேட்கும்போது அதற்கு ஒரு விளக்கமும் கொடுக்கப்பட வில்லை. முக்கியமாக மதுவை அருந்தக் கூடாது. ஒருமுறை சுவைத்துப் பார்த்தாலே வீட்டை விட்டு வெளியேற்றி விடுவார்கள்.

மறுபக்கத்தில் காந்தி மகானுக்குத் தீவிர ஆசைகள் இருந்தன. மதுவை ஒருநாளும் குடிக்கவில்லை. குடித்தவுடன் இன்னும் வேண்டும் என்கிறார். சீட்டு விளையாட்டில் பணம் வென்றதில்லை. ஒருமுறை வென்றவுடன் இன்னும் வேண்டும் என்கிறார். இந்த அதிகரிக்கும் ஆசை இறுதியில் அவரை பலவற்றை இழக்க வைக்கிறது. இவர்களுடைய மகன் தாதோவும் இவர்கள் போலவே தனது கருத்தில் தீவிரமாக உள்ளார்.

ஆனால், படத்தின் நோக்கம் இன்னும் தெளிவாகக் காட்டப்பட்டிருக்கலாம். முதல் கூறிய மூன்று கதாபாத்திரங்களின் நோக்கங்கள் விரிவாகக் காட்டப்பட வில்லை. சிம்ரனுக்கு நடிக்க இப்படத்தில் அதிக வாய்ப்பு இல்லை. துருவினால் தாதோவின் வெறியை நடிப்பில் எடுத்துக் காட்ட முடியவில்லை. இவ்வாறு அமையா ததால் இவர்களது தீவிரம் சிலவேளை கோமாளித்தனமாக இருக்கிறது. படத்தை இன்னும் நீடிக்காமல், சில காட்சிகளைக் குறைத்து நாச்சிக்குக் கூடநேரம்



அளித்திருக்கலாம். என்றாலும் காந்தி மகானின் நண்பன் சத்யாவும் (சிம்ஹா) அவரது மகன் ராகேஷின் கதாபாத்திரங்களும் மிகவும் நன்றாக அமைந்துள்ளன.

இவ்வாறு பிற கதாபாத்திரங்களைப் பற்றிக் காட்சிகள் விரிவாக அமைத்திருந்தால் படம் இன்னும் சிறப்பாக அமைந்திருக்கும். இருந்தாலும் நல்ல கருத்தை முன்வைத்த இப்படத்தை அனைவரும் பார்க்கலாம்.




**சிதம்பரம் ஸ்ரீ நடராஜர் கோயில் திருச்சிற்றம்பலம்** அன்னதான அறக்கட்டளை அனைவரும் சாப்பிட வாருங்கள்.28.02.2022.ஸோமவாரம் பிரதோஷம்.01.3.2022. செவ்வாய்கிழமை மஹா சிவராத்திரி 02.03.2022 புதன் கிழமை அமாவாசை போன்ற முக்கிய விசேஷ தினங்களில் சிதம்பரம் ஸ்ரீ நடராஜரை தரிசனம் செய்ய வரும் பக்தர்களுக்கு திருச்சிற்றம்பலம் அன்ன தான அறக்கட்டளையில் அன்னதானம் வழங்கப்படுகிறது.

இதற்கு தங்களால் முடிந்த அளவு உதவி செய்து இந்தத் தர்மத்தின் சிறந்த பலன்களை அடைய அன்புடன் அழைக்கிறோம். இந்த சமயத்தில் கூட்டுப் பிரார்த்தனை செய்து அன்னதானம் வழங்கி அதன் ரசீது, அட்ஷதை, விபூதி, குங்குமம், சந்தனம் ஆசீர்வாத பிரசாதங்கள் முறையாக அனுப்பி வைக்கின்றோம்.

உங்கள் குடும்ப சங்கல்பம், பெயர், நட்சத்திரம், ராசி, கோத்ரம், விலாசம் தேவை. முறையாக எழுதி அனுப்பவும்.

நன்றி. சி.நவதாண்டவதீக்ஷிதர் 9345512976.gokulpay. omganesh. நன்கொடைகளை இந்த வழியில் அனுப்பி வைக்கலாம்.

**THIRUCHITRAMBALAM ANNADHANA TRUST A/C.NO..30263863248 STATE BANK OF INDIA CHIDHAMBARAM BRANCH IFSC CODE SBIN 0000823**. உடன் முன் பதிவு செய்யவும்.



தொடர்புகளுக்கு:

**gmail_anandhancdm2015@gmail.com**


## இன்னல்...

08ஆம் பக்கத்தொடர்ச்சி

சத்தும், 5 சதவீதம் தாது உப்புக்களும்,




